1980 பிப்ரவரி 7]

நெல்லை மாவட்டத்தில் நிருபர்களுக்கு மனைப்பட்டாக்கள்.

*வினா எண் 83— திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை மாவட்டத்தில் நிருபர்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) & (ஆ) நெல்லை மாவட்டத்தில் நிருபர்களுக்கு இலவசமாக மனைப் பட்டா வழங்கப்படவில்லை. ஆனால் 10 நிருபர்களுக்கு 22 தவணைகளில் காலக் கிரையத் தொகை (Market Value) செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் தற்காலிக உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் ஒருவர் மனைக்கான முழுக் கிரயத்தையும் செலுத்தி விட்டபடியால் அவருக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது 10 பேர்களுக்கு மனைப் பட்டா வழங்கப் பட்டதாகவும், அதற்கு விலை நிர்ணயிக்கப்பட்டு பணம் வழங்கிய தாகவும் சொன்னார்கள். எந்த ஊரிலே இந்த மனைப் பட்டா வழங்கப்பட்டது? என்ன கிரயம் ஒரு மனைக்கு போடப்பட்டிருக்கின்றது என்பதை அறிய முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மனைக் கிரையம் மார்க்கெட் வேல்யூபடி போடப்பட்டிருக்கின்றது.

நிலவரி முதலியவைகளுக்கான ரசீதுகள்.

*வினா எண் 84—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராம அதிகாரிகள் வசூலிக்கும் நிலவரி, நீர் வரிக்கான ரசீதுகளை தமிழில் எழுத அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?